பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 20 வெள்ளிக்கிழமை 04.07.2025 கதிர் 237

இனி இது ரகசியம் அல்ல!

ஆளும்தரப்பு சிக்கன நடவடிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கை மீது ஏற்படுத்தி தாக்கம் தொடர்பில் அண்மையில் ஒரு தகவல்
☞2

## லஞ்சக் குற்றச்சாட்டில் பொலிஸ் சர்ஜன்ட் கைது

மணல் ஏற்றிச் சென்ற லாரியைப் பின்தொடர்ந்து சென்று ரூ.10,000 லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டில், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு தெற்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.
☞6

## ஊழலை எதிர்த்துப் போராடும் நிறுவனங்களின் பலவீனங்கள் சீர்திருத்தங்களுக்கு இடைஞ்சல்

### டிரான்பரன்ஸி இன்டர்நேஷனல் அறிக்கை

ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கை முக்கியமான நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், அதனை மேற்கொள்ளும் நிறுவனங்களில் காணப்படும் பலவீனங்கள் இந்த சீர்திருத்தங்களுக்கு இடைஞ்சலாக இருப்பதாக டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா (TISL) தெரிவித்துள்ளது.

தற்போது, இலங்கை 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டம் ஆகியவற்றை இயற்றியுள்ளதுடன், ஊழல் எதிர்ப்புக்கான தேசிய செயல் திட்டத்தின் (2025- 2029) வளர்ச்சியையும் செயல்படுத்தியுள்ளது.

ட்ரான்பரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கையில் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UN-CAC) அத்தியாயம் ணுஊணு (தடுப்பு) மற்றும் அத்தியாயம் ா (சொத்து மீட்பு) ஆகியவற்றை செயல்படுத்துவது குறித்த சிவில் சமூக அறிக்கையில் இந்த நிலமை விளக்கப்பட்டுள்ளது,

இலஞ்ச ஊழல் மோசடிகளுக்கு எதிரான நிறுவனங்களின் வளப் பற்றாக்குறை, பயனற்ற அமலாக்கம் மற்றும் அர்த்தமுள்ள பொதுப் பங்கேற்புக்கு ஒரு வழிமுறை இல்லாதது ஆகியவை இந்த விடயத்தில் முக்கிய பலவீனங்களாக அறிக்கையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் செயல்திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் விதிமுறைகளை தொடர்ந்து பலவீனமாக அமல்படுத்துதல், திறம்பட செயல்படத் தேவையான கட்டமைப்பு சுதந்திரம் மற்றும் நிறுவனத் திறன் இல்லாத முக்கிய பொது நிறுவனங்கள், சிக்கலான ஊழல் மற்றும் பணமோசடி விசாரணைகளில்
☞2
நிறுவனங்களுக்கு

## சுகாதாரத்திற்குத் தீங்கான பொருள்கள் நுழைய தடை

சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் உள்ளிட்ட பொருட்கள் சந்தைக்குள் நுழைவதைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

சந்தை ஆய்வுகளில் ஆபத்தான நிலமைகள்
☞2

## இந்த ஆண்டில் 6 மாதங்களில் 62 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்

**34 பேர் அதில் உயிரிழந்தனர்.**

2025ஆம்ஆண்டின்தொடக்கத்திலிருந்து, 62 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன, மேலும் அந்தத் துப்பாக்கிச் சூடுகளில் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடுகளில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களைச் சேர்ந்தவர்களால் நிகழ்த்தப்பட்ட 44 சம்பவங்களும் அடக்கம், இதில் 32
☞2

## நல்லாட்சிக் கால வழக்குகளை மீண்டும் விசாரிக்கவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி (UNF) ஆளும்தரப்புக் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மீண்டும் தோண்டியெடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (ஐமச) ஆளும்தரப்பை வலியுறுத்தியது, ஆனால் பின்னர் வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான ஆளும்தரப்பின் காலத்தில் தொழில்நுட்பக் காரணங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவை திரும்பப் பெறப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

'நல்லாட்சிக் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான கோப்புகள் இன்னும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் உள்ளன. இந்த வழக்குகளை மீண்டும் தொடங்குவதை விரைவுபடுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்று மத்தும பண்டார மேலும் தெரிவித்தார்.

பொதுநிதியைமோசடிசெய்தவர்கள்
☞2

## குஷ் போதைப் பொருளுடன் தொழிலதிபர் ஒருவர் கைது

### கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சம்பவம்

இலங்கையைச்சேர்ந்தவிமானப்பயணி ஒருவர் தனது கோட்டில் மறைத்து வைத்துக் கடத்தி வந்த குஷ் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு, மருதானை, சங்கராஜ மாவத்தையில் வசிக்கும் 48 வயதான காலணி நிறுவன தொழிலதிபரே கைது செய்யப்பட்டுள்ளார். சுங்க அதிகாரிகள்
☞2

## வவுனியாவில் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிப்பு

### பணிகள் தொடங்கப்பட்டதாக திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியாவில் கூகுள் வரைபடம் மூலம் வனவளத்திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகளை முன்னெடுத்துள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில்உள்ளஅவரதுஅலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கும் காணியற்ற மக்களுக்கும் புதிதாக திருமணம் முடித்து காணிகள் அற்ற குடும்பங்களினதும் நன்மை கருதி அவர்களுக்கான ஒரு தீர்வினை வழங்குவதற்கான நடவடிக்கையினை தேசியமக்கள் சக்தி அரசு எடுத்துள்ளது.

அந்தவகையில் கடந்த 2012ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் கூகுள் வரைபடத்தின் மூலம் வனவளத்திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட அனைத்துகாணிகளையும் விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த மாவட்டத்தில் அண்ணளவாக 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 52ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளது. அவை அனைத்தையும் என்பிபி
☞2

## மேலும் 2 சிறுவர்களின் எலும்புகூடுகள் செம்மணியில் நேற்றும் கண்டுபிடிப்பு

### இதுவரையான எண்ணிக்கை 40 ஆக உயர்வு




**செம்மணி மனித புதைகுழியில் நேற்று மேலும் இரு சிறுவர்களின் எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரையில் 40 மனித எலும்புக்கூடுகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 34 எலும்புக்கூடுகள் முழுதாக வெளியே எடுக்கப்பட்டுப்**
☞2

## செம்மணிப் புதைகுழி குறித்து பிரிட்டிஷ் ஆளும்தரப்பு கவலை

செம்மணி மனித புதைகுழிகள் குறித்து ஆழ்ந்த கவலைகொண்டுள்ளதாக பிரிட்டிஸ் ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கேள்வியொன்றிற்கான எழுத்து மூல பதிலில் பிரிட்டிஸ் ஆளும்தரப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பொறுப்புக்கூறலிற்கான பிரிட்டிஷ் ஆளும்தரப்பின் அர்ப்பணிப்பை மீண்டும் வெளியிட்டுள்ள வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கதெரின் வெஸ்ட் செம்மணியில் மனிதப் புதைகுழி சமீபத்தில்
☞2

### ஆளும்தரப்பின் சூழ்ச்சி அம்பலப்பட்டதால்

## காணிப் பிரச்சினையில் என் மீதான அமைச்சரின் கோபம் நியாயமானது

### சுமந்திரன் கருத்து

வடக்கில் சுமார் 8 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் ஆளும்தரப்பின் சூழ்ச்சி அம்பலப்பட்டு அந்தப் பணிகள் தடைப்பட்டுப் போனமையால் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கோபமடைவது இயல்பான விடயமேயாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன்.

வடக்குமாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை
☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

பகிர்ந்திருந்தேன். அதிக எரிபொருள் செலவு காரணமாக ஒருநாள் அமர்வுகளுக்கெல்லாம் நாடாளுமன்றம் வரமு-டியாது என்று உறுப்பினர்கள் பலரும் தவிர்த்துவிட்டார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்திருந்தேன். ஆளும்தரப்புதனதுசிக்கனநடவடிக்கைகளின் விளைவுகளை இப்போது ஒவ்வொன்றாக எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது என்றே தகவல்கள் கூறுகின்றன.

உணவு விலை உயர்வுக்குப் பிறகு நாடாளுமன்றஊழியர்கள்நாடாளுமன்றத்தில் உணவைக் குறைத்ததாகக் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து உணவுகளின் விலைகள் குறைக்கப்பட்டன. ஆனாலும்அந்தவிலையும் அதிகம்தான், கட்டுப்படியாகவில்லை என்று ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அவர்கள் தமது வீடுகளில் இருந்தே இப்போதெல்லாம் உணவுகளை எடுத்து வருகின்றனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக நாடாளுமன்றத்தின் பிரதான கட்டடத்திற்கு நாடாளுமன்றப்பணியாளர்கள்உணவுகளை எடுத்து வருவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதுதான் பணியாளர்கள் பலரும் நாடாளுமன்றத்திலேயே உணவு எடுத்துக்கொள்வதற்கான காரணமாக அமைந்திருந்தது. ஆனால் இப்போது பலரும் வீட்டிலிருந்தே உணவைக் கொண்டு வந்து பொது சாப்பாட்டு மண்டபத்தில் வைத்துவிட்டு பகலில் அங்கேயே சாப்பிடுகிறார்கள் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற பொது ஊழியர்களின் உணவுகட்டணம்சமீபத்தில்ரூ.1000இலிருந்து 2000 ஆகவும், நிர்வாக அதிகாரிகளின் உணவு கட்டணம் ரூ. 1500இலிருந்து 3000 ஆகவும் உயர்த்தப்பட்டது. இது நாடாளுமன்றத்தின் அவைக் குழு எடுத்த முடிவின்படி செய்யப்பட்டது.

உணவுகளின் விலை உயர்வுக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் சாப்பிட மாட்டோம் என்று ஊழியர்கள் குழு சமீபத்தில் நாடாளுமன்றத் தலைவர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்தது. சிலர்காவல்துறைஅதிகாரிகளுக்கு வழங்கப்படும் விலையில் தங்களுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிவருகின்றனர்.

இது தொடர்பாகக் கேட்டபோது, நாடாளுமன்ற ஊழியர்களின் உணவுக் கட்டணம்அண்மையில்அதிகரிக்கப்பட்டாலும், அது உணவுச் செலவை முழுமையாக ஈடுகட்டாது என்று அவர் கூறினார்.

முன்னர் எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களை யாராவது பார்ப்பதற்காக நாடாளுமன்றத்திற்குச்சென்றால் அவர்களை உணவகத்திற்கு அழைத்துச் சென்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வழங்கப்படும் சாப்பாடுமாதிரிவழங்கிவயிற்றைதிருப்திகரமாக நிரப்பி அனுப்பி விடுவார்கள். ஏனெனில் அந்தளவிற்குநாடாளுமன்றத்திற்குள்சாப்பாட்டு விலை குறைவு. போகிறவருக்கு வேலை திருப்திகரமாக முடிகிறதோ இல்லையோ உணவு திருப்திகரமாக இருக்கும். இப்போது அதெல்லாம் நடப்பதில்லை. மிஞ்சிப்போனால் ஒரு தேநீருடன் அனுப்பிவிடும் நிலமைதான் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குஇருக்கிறது. அதனால் இப்போதெல்லாம் தம்மை நாடாளுமன்றத்திற்கு வந்து சந்திக்கும்படி எந்த உறுப்பினரும் ஊக்குவிப்பதும் இல்லை.

ஆளும்தரப்பின் சிக்க நடவடிக்கைகளின் விளைவுகள்இப்படி'நல்லநல்ல'விளைவுகளை எல்லாம் ஏற்படுத்தி வருகின்றது. கடைசியில் இவையெல்லாம் அடுத்த தேர்தலில் ஆளும்தரப்புக்கு எதிராகத் திரும்பும் நிலை வரும்போது தனது செயலின் விளைவுகளை ஆளும்தரப்பு உணரும் நிலை வரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நல்லாட்சிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்பொதுச்சொத்துக்களைத்திருடியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஐமசக்திக்கு எந்த விமர்சனமும் இல்லை என்பதைக் குறிப்பிட்ட மத்தும பண்டார, அந்த முயற்சிகளுக்கு முழு ஆதரவு அளிக்கிறார் என்றும் தெரிவித்தார். ஆனால் இதுவரை அந்த விடயத்தில் ஆளும்தரப்பு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் அவர் அதிருப்தி தெரிவித்தார்.

## மேலும் 2 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிவான் ஆனந்தராஜாவின் மேற்பார்வையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் சட்டவைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு இரண்டாம் கட்ட அகழ்வு நேற்று 8ஆவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

இதுவரை 34 முழுமையான மனித எலும்புக்கூடுகள்அகழ்ந்துஎடுக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, 6 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 4 புதன்கிழமை அடையாளம் காணப்பட்டிருந்தன. நேற்று மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் அடையாளம்காணப்பட்டன. அவை குழந்தைகளுடையதாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எலும்புக்கூடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ள காரணத்தால் அவற்றின் எண்ணிக்கையைக் கணக்கிடுவது உடனடியாகச் சாத்தியமாகவில்லை என்றும் ஒவ்வொரு எலும்புக்கூடுகளாக அகற்றும் போதேஅதற்குள்ளிருக்கும்எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையை உறுதிபடத் தெரிவிக்க முடிகிறது என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்ட 34 என்புக் கூட்டுத் தொகுதிகளும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தடயவியல் மற்றும் மானிடவியல் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய அகழ்வுப் பணி நிறைவின் போது செய்தியாளர்களிடம் பேசிய, காணாமற்போனோர் சார்பாக இந்த வழக்கில் முற்பட்டிருக்கும் சட்டத்தரணி நிரைஞ்சன் தெரிவித்ததாவது:

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் எட்டாம் நாள் யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்றது.

34 மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளன. அதேநேரத்தில்இரண்டுசிறுவர்களின் எச்சங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதோடு நான்கு மண்டை யோடுகள் தெரிகின்றன. அதில் ஒன்று அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றது. மொத்தமாக 40 மனித எலும்புக்கூடுகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. நான்கு பேருடைய மண்டையோட்டு தொகுதிகள் இன்னமும் துப்பரவாக அடையாளப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதேநேரம் ஏற்கனவே செய்மதியில்காட்டப்பட்ட சந்தேகத்துக்கிடமான பிரதேசத்தில் நேற்று முதல் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று ஒரு ஆடையை ஒத்த சந்தேகத்திற்குரிய பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது அகழப்படவில்லை. அது அகழ்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அது தொடர்பான மேலதிக விவரங்களை தெரிவிக்க முடியும் - என்றார்.

அடையாளம் காணப்பட்டுள்ள அந்தத் துணி பெண்கள் அணியும் சேலையை ஒத்ததாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு விரைவில் விடுவிக்கும்.

அந்தக் காணிகளை அதன் உரிமையாளர்களுக்கும் காணிகள் அற்ற மக்களுக்கும் வழங்குவதற்கான துரித நடவடிக்கையினை நாம் மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் வவுனியாவில் 849 குளங்கள் உள்ளது. அதில் 221 குளங்கள் வனவளதிணைக்களத்தின் எலைக்குள் அமைந்துள்ளது. இவற்றில் தற்போது 44 குளங்களை உடனடியாக விடுவித்து அவற்றை மீளவும் புணர்நிர்மானம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் காடுமண்டி காணப்படுகின்ற ஏனைய 149 குளங்களை மீட்டு அவற்றை சுத்தப்படுத்தி மக்கள் பாவனைக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கை விரைவாக முன்னெடுக்கப்படும்.இந்த வருடத்திற்குள் அந்த பணிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த மாவட்டத்தில் ஆறு பெரிய நீர்பாசன குளங்கள் உள்ளன. அவற்றை புணரமைப்பதற்காக 780 மில்லியன் ரூபாய் தேவையாகவுள்ளது. அந்த நிதியை அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்காணிவிடுவிப்பின்முதற்கட்டமாக நெடுங்கேணியில்வனவளத்திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் விடுவிக்கப்படவேண்டிய இடங்களை அடையாளப்படுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை நேற்றயதினம் ஆரம்பித்து வைத்தோம். வவுனியா வடக்கு பிரதேச்செயலாளர்,வனவளதிணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணஅபிவிருத்திக்காகஉலகவங்கியானது ஒருபில்லியன்டொலர்நிதியைவழங்கவுள்ளது. இதன் மூலம் வடகிழக்கு மக்களின் பொருளாதாரத்தை வளம்பெறசெய்து அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவோம். என்று தெரிவித்தார்.

## சுகாதாரத்திற்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியுள்ளதால், அடுத்த இரண்டு மாதங்களில்கடுமையான முடிவுஎடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அழைக்கப்பட்டு இது தொடர்பில் அறிவுறுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும்சமரசிங்ககூறினார். குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சிறந்த முடிவுகள் எடுக்கப்படும் என்றார் அவர்.

## லஞ்சக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட நபர், அதே பொலிஸ் பிரிவின் விரைவு பதில் மோட்டார் சைக்கிள் பிரிவில் பணியாற்றுபவர் ஆவார்.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் சார்ஜன்ட் புதன்கிழமை மேலும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் குற்றத்தடுப்பு மோட்டார் சைக்கிள்ரோந்துப்பணியில்ஈடுபட்டிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நிபந்தனைகளை மீறிக் கொண்டு செல்லப்பட்ட மணலை அனுமதிப்பதற்காக அவர் ரூ.10,000 லஞ்சமாகப் பெற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளிற்கான பொறுப்புக்கூறலிற்கு பிரிட்டன் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி உட்பட பலரை சந்தித்து உரையாடியதை நினைவுகூர்ந்துள்ள அவர் இலங்கையில் காணாமல்போனவர்களின்ஹீன்உறவுகளுடன் பிரிட்டிஸ்தூதரகம்நெருக்கமானதொடர்புகளை பேணுகின்றது என தெரிவித்துள்ளார்.

## காணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும்எனஆளும்தரப்பினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28 அறிவிக்கப்பட்டது. இதற்காக 2430 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

காணிகளைக் கையகப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக சுமந்திரனால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதுகுறித்த விசாரணைகளை அடுத்து அவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்தது.

தடையுத்தரவுபிறப்பிக்கப்பட்ட அன்றிரவே ஆளும்தரப்புவெளியிட்ட 2443 எனும் இலக்க வர்த்தமானியின் ஊடாக 2430 இலக்க வர்த்தமானி நீக்கப்பட்டது. இதையடுத்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தில் சுமந்திரனைக் கடுமையாக விமர்சித்திருந்தார். சுமந்திரன் போன்றோர் ரணில் விக்ரமசிங்கவுடன் பணியாற்றியமையினால்அவர்கள்தம்மையும் ரணிலைப் போன்று கருதிவிட்டனர் என்று தெரிவித்தார்.

அத்தோடுகாணிஉரித்தைஉறுதிப்படுத்தும் நோக்கில் தாம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசியல் மற்றும் இனவாத அடிப்படையிலான கருத்துக்களின் விளைவாக இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அதற்குத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்திருக்கும் பதிவின் ஊடாகப் பதிலளித்துள்ள சுமந்திரன், ''அவர்கள் எதனை வேண்டுமானாலும் கூறட்டும். தமது சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் கோபமடைவது இயல்பான விடயமேயாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு "அபகரிக்கப்படவிருந்தநிலங்கள் எமது நடவடிக்கைகளின் விளைவாக பாதுகாக்கப்பட்டமையை உறுதிசெய்த அமைச்சருக்குஎமதுநன்றிகள். இவ்விடயத்தில் தொடர்ந்தும் அவதானமாகவே இருப்போம்" என்றும் சுமந்திரன் பதிவிட்டுள்ளார்.

## ஊழலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையேயான ஒருங்கிணைப்பு குறைவாக இருப்பது மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது அதிகாரிகளால் முன்கூட்டியேவெளிப்படுத்தல்தேவைகளுக்கு இணங்காதது ஆகியவை முக்கிய கண்டுபிடிப்புகளில் அடங்கும்.

இந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், சட்டச்சீர்திருத்தங்கள்தெளிவானசெயல்படுத்தல் செயல்முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த நிறுவனநடவடிக்கைகளால்ஆதரிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளைஉருவாக்கிநெறிப்படுத்தவும், முக்கிய மேற்பார்வை அமைப்புகளின் சுதந்திரம், ஆணை மற்றும் வளங்களை மேம்படுத்துவதன்மூலம்நிறுவனமேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தவும் அறிக்கை பரிந்துரைத்தது. சரியான நேரத்தில் ஆலோசனைகளை முறைப்படுத்துவதன் மூலமும், சட்டங்கள், பட்ஜெட்டுகள் மற்றும் அரசாங்க முடிவுகளின் முன்கூட்டியே வெளிப்படுத்தலை விரிவுபடுத்துவதன் மூலமும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்கள் பங்கேற்பை மேம்படுத்துவது மற்றொரு பரிந்துரையாகும்.

## குஷ் போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கொண்டு வந்த காலணித் தொகுதியைச் சோதித்துக் கொண்டிருந்தபோது, தான் அணிந்திருந்தகோட்டைக்கழற்றிப்பக்கவாட்டில் ஒரு நாற்காலியில் வைத்துள்ளார்.

இதில் சந்தேகம் அடைந்த சுங்க அதிகாரி ஒருவர், அனுமதி நடைமுறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தொழிலதிபர்கழற்றிய கோட்டை எடுத்து, அதை ஆய்வு செய்துள்ளார். அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1 கிலோ கிராம் மற்றும் 847 கிராம் 'குஷ்' போதைப்பொருளை அவர் கைப்பற்றினார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் கொல்லப்பட்டனர் என்றும் பொலிஸ் தெரிவிக்கின்றது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகராறுகளே ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக் கும்பல்கள் இடையிலான துப்பாக்கிச் சூடுகளுக்குக் காரணம் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# வெள்ளை ஈயை கட்டுப்படுத்த மக்கள் ஆதரவு தரவேண்டும்

## அதிகாரிகள் வேண்டுகோள்

தென்னைபயிர்ச்செய்கையைபாதிக்கும்வெள்ளை ஈயின் தாக்கமானது அதிகரித்துள்ளது. அதனை கட்டுப்படுத்த இரண்டு வார வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லூரடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னைஉற்பத்தியில் வெள்ளைஈயானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தென்னை வளர்ப்பாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றார்கள். வேறு மாகாணங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதன் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

இந்த வெள்ளை ஈயினை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து இரண்டு வார வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்த உள்ளோம். அந்தவகையில் சாவகச்சேரி, உடுவில், கோப்பாய், நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற 5 பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

மேற்குறித்த 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள அனைத்து தென்னை மரங்களுக்கும் வெள்ளை ஈயினை கட்டுப்படுத்தும் திரவ கரைசலை விசிறவுள்ளோம். இதற்காக 200 விசிறும் இயந்திரங்களை பயன்படுத்த உள்ளோம். ஒரு இயந்திரத்தால் ஒரு நாளைக்கு 90 மரங்களுக்கு கரைசலை விசிற முடியும். அதற்கு ஏற்ப திட்டமிட்டுள்ளோம்.

இதனை முன்னெடுப்பதற்கு எமக்கு ஆளணி பற்றாக்குறை, உணவுப் பிரச்சினை, பணியில் ஈடுபடவுள்ளோருக்கான சம்பள கொடுப்பனவு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே இந்த பணியினை தனியாக அரசாங்கமோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களோ செய்ய முடியாது. மக்களும் எங்களுடன் கை கோர்த்தால் மாத்திரமே இந்த பணிகளை முன்னெடுக்க முடியும்.

இந்த பணியில் பங்கெடுக்க விருப்புவோர் சுயாதீனமாக வந்து பிரதேசங்களை தாண்டியும் உங்களது பங்களிப்பை வழங்கலாம். அடுத்த வீட்டில் அல்லது அடுத்த பிரதேசத்தில் தானே வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளது, எமது பகுதியில் இல்லை தானே என்று எண்ணாதீர்கள். அது உங்களது பகுதியிலோ அல்லது உங்களது வீட்டிலோ உள்ள தென்னைகளையும் பாதிக்கலாம். எனவே இதனை ஒழிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வருடாந்தம் 800 சிறுவர்கள் புற்றுநோய் பாதிப்பால் அவதி

நாட்டில் வருடாந்தம் சுமார் 33,000 புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அவர்களில் 35 சதவீதமானோர் அதாவது 800 பேர் சிறுவர் புற்றுநோயாளர்கள் என அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் இந்திரா டிரேடர்ஸ் தனியார் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுவர் நோயாளர்களுக்கான ஐந்து மாடிக் கட்டிடத்தின் அடிக்கல் நாட்டு விழா வியாழக்கிழமை (3) சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:

மருத்துவமனை கட்டுமானப் பணிகளால் சுகாதார அமைச்சு பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. சில கட்டடநிர்மாண பணிகள் சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் ஒரு சில காரணங்களால், அப்பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆகையால் கட்டுமானப்பணிக்காக மதிப்பிடப்பட்ட தொகையை விட 50 முதல் 60 சதவீத பணத்தை மேலதிகமாக வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில அரச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் போதும் காலதாமதம் ஏற்படுகிறது.

ஆலோசனை மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஒப்பந்த திட்டத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து ஜனாதிபதியும் கவனம் செலுத்தியுள்ளார். திறைசேரியிலிருந்து பணத்தை விடுவித்து குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றால் மாத்திரமே மதிப்பீட்டின்படி பணிகளை நிறைவு செய்ய முடியும்.

புதிய கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் அத்திட்டம் முழுமை பெறும் வரையான காலம் வரும் காலங்களில் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படும். நாட்டில் வருடாந்தம் சுமார் 33,000 புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அவர்களில் 35 சதவீதமானோர் அதாவது 800 பேர் சிறுவர் புற்றுநோயாளர்களாவர்.

அந்தவகையில் வருடாந்தம் மஹரகம தேசிய வைத்தியசாலையில் 11 ஆயிரம் புற்றுநோயாளர்கள் சிகிச்சைப் பெறுகின்றனர். புற்றுநோய் சிகிச்சைக்கான உபகரணங்களை வைத்தியசாலைகளுக்கு தொடர்ச்சியாக வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் ஆளும்தரப்பால் மஹரகம புற்றுநோய் வைத்திய நாளைக்கு விரைவில் 5 புதிய லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்கள் வழங்கப்படஉள்ளதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மருத்துவமனைக்கு மேலும் இரு லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்களை வழங்க உள்ளது.

இதன் மூலம் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகள் மேலும் எளிதாக்கும். மஹரகம வைத்தியசாலையின் சமையலறையை ஒரு முன்னோடி திட்டத்தின் மூலம் தனியார் மருத்துவமனை சமையலறையின் நிலைக்கு மேம்படுத்தப்படும். நோயாளிக்கு ஏற்ற உணவுத் திட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக, நோயாளியின் தேவைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களுடனும் ஊட்டச்சத்து நிபுணர்களின் பங்களிப்புடனும் இந்த மருத்துவமனையில் ஒரு முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட உள்ளது என்றார்.

## ஒட்டுசுட்டான் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்விற்குக் காரணம் பொலிஸ்

### ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான்பிரதேசத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வுச்செயற்பாடுகளுக்கு பொலிஸாரே காரணமென தெரிவித்துள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை எனறும் விடுதலைப்புலிகள் முறையாக சட்டம் ஒழுங்கினைப் பாதுகாத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முன்மொழிவொன்றையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் முன்வைத்தார். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே ரவிகரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகிறது. இருப்பினும் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மிக அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு இங்கு சட்டவிரோத செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றபோது, சட்டம்ஒழுங்குமுறையாகபேணப்படுவதாக பொலிஸாரோ, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய ஏனைய தரப்பினரோ போலிக் கருத்துக்களை இங்கு தெரிவித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை.

தற்போது இந்த நாட்டில் ஆட்சிபீடத்திலுள்ள அரசும் அரசுத் தலைவர்களும் கூட இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுமெனக் கூறுகின்றனர்.

நாமும் சட்டம் ஒழுங்கு முறையாகப் பாதுகாக்கப்படவேண்டும்என்றேதொடர்ந்து வலியுறுத்துகின்றோம். ஆனால் இங்கு சட்டம்ஒழுங்கு சீரின்றியே காணப்படுகிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவேண்டிய பொலிஸார் மீதே நாம் குற்றச்சாட்டு முன்வைக்கவேண்டியுள்ளது.

பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினாலேயே இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வுகள் உட்பட பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

ஆனால், விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான மணல் அகழ்வுச் செயற்பாடுகளோ கசிப்பு, கஞ்சா முதலான சட்டவிரோத போதைப்பொருட்களோ எவையும் இருக்கவில்லை. விடுதலைப்புலிகள் முறையாகசட்டம்ஒழுங்கைப்பாதுகாத்தனர். அதனை யாரும் மறுக்கமுடியாது என்றார்.

## காரைநகர் விபத்தில் காயமடைந்தவர் சாவு

காரைநகர் பாலத்தடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் காரைநகர் - களபூமி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் ஆவார்.

ஜூன் 1 இரவு, குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும், எதிரே வந்த லாண்ட்மாஸ்டர் வாகனமும் காரைநகர் பாலத்தடியில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த அவர், உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், வியாழக்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்துடைப்பு முயற்சியா?

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக தென்னை மரங்களை முற்றிலுமாக வீழ்த்திய வெள்ளை ஈக்களின் தாக்கம் ஒரு பெரிய வேளாண்மை நெருக்கடியை உருவாக்கியிருந்தது. இந்த வெள்ளை ஈக்கள் (white flies) காற்றுடன் பரவி, ஒரு பசுமையாகத் திகழ்ந்த தென்னைத் தோட்டங்களை கறுப்பு ஆவியில் மூடியதைப் போன்று அழித்ததையும், தேங்காய் விளைச்சலை பெரிதும் பாதித்ததையும் நாம் வன்கொடுமையாகவே பார்த்துள்ளோம். இந்த நோய்த் தாக்கம் தென்னைகளையே உயிரிழப்புக்கு உட்படுத்திய அளவிற்கு வேகமாகவும் பரவலாகவும் இருந்தபோதிலும், அதனைத் தடுக்க ஆளும்தரப்பின் நடவடிக்கைகள் எதுவும் கடந்த காலங்களில் இருந்ததேயில்லை. அல்லது மிக மந்தமாக இருந்தன என்பது துரதிருஷ்டவசமான விடயமாகும்.

இந்நிலையில் இப்போது, அதாவது இரண்டு வருடங்களுக்குப் பிறகு, வெறும் இருவாரங்களுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கையை எடுத்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்திருப்பது, மக்களின் மனங்களில் ஏற்கனவே உண்டாகியுள்ள நம்பிக்கையின்மையை மேலும் தீவிரப்படுத்துவதாகும். தென்னையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள், இந்த நோயால் தங்கள் வாழ்வாதாரம் முற்றிலும் நாசமாகி, கடனில் மூழ்கியுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இப்போதுதான் நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுவது, 'நோய் தீர்ந்த பிறகு மருந்து கொடுக்கும்' நிலையைக் காட்டுகின்றது. ஏற்கனவே வெள்ளை ஈக்கள் தாக்கத்தில் இருந்து ஓரளவிற்கு தென்னைகள் தற்காலிகமாக மீண்டு வருகின்றன. செடிகள் பழைய இலைகளை விட்டு புதிய இலைகளை உற்பத்தி செய்து தங்களை மீட்டுக் கொள்ளும் சக்தியை காட்சிப்படுத்த ஆரம்பித்துள்ளன. இந்த நேரத்தில் அதிகாரிகள் அறிவிக்கும் இருவாரத்திற்கான தடுப்பும், தெளிப்பும், கண்காணிப்பும், உண்மையில் பயனுள்ளதா அல்லது வெறும் கண்துடைப்பா என்பதுதான் முக்கியக் கேள்வியாகும்.

விவசாயிகளின் கோரிக்கைகள், கிராம மக்கள் எழுப்பிய கூச்சல்கள், ஊடகங்கள் வெளிப்படுத்திய செய்திகளின் பின்னரே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போலவே உள்ளது. இது ஒரு கண்துடைப்பு மட்டுமன்றி, உண்மையான திட்டமிட்ட நடவடிக்கையென ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தென்னை ஒரு காலங்களில் வடக்கின் அடையாளமான ஒரு பயிராக இருந்தது. இன்று அந்த அடையாளம் சிதைந்து போனதற்குப் பிறகுதான் அதை மீட்டெடுக்க முயற்சிப்பதாக ஆளும்தரப்புக் காட்ட முயற்சிக்கிறது.

இனிமேல் இந்த மாதிரியான காலதாமதங்களை தவிர்த்து, முற்றிலும் முழுமையான திட்டத்துடன் நீடித்த நிவாரண நடவடிக்கைகளும், ஆய்வுகளும், கண்காணிப்புகளும் இடம்பெற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இவ்வாறு ஒரு பயிர் அழிந்து கிடந்தபோது, அதை மீட்டெடுக்க தக்க நேரத்தில் நடவடிக்கையெடுக்காததற்கு ஆளும்தரப்புத்தான் முழுப் பொறுப்பையும் சுமக்கப்படவேண்டும். இல்லையெனில் விவசாயிகளின் எதிர்மறை அனுபவங்கள், அடுத்த தலைமுறையின் விவசாய விருப்பத்தையே சிதைக்கும் அபாயம் உண்டு.

அதனால், வெறும் இருவார நடவடிக்கையெனத் தளர்ந்து நிற்காமல், தென்னைத் தோட்டங்களை மீட்டெடுக்கும் ஒரு முழுமையான நீடித்த திட்டம், ஆளும்தரப்பால் செயல்படுத்தப்பட வேண்டும். அதுவே உண்மையான நடவடிக்கையாக இருக்கமுடியும்.




# இது தேறும், இது தேறாது

**என். சத்திய மூர்த்தி**

யாழ்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான மேயர் அல்லது தவிசாளர் பதவிகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. எதிர்பார்த்தது போல், தமிழர் கட்சிகள் தங்களுக்குள்ளேயே அடித்துக்கொண்டு, வெவ்வேறு காம்பினேஷன்களில் இந்தத் தேர்தல்களைச் சந்தித்தனர். தேர்வு முடிவுகளும் அது போலவே அமைந்தன.

ஒருபுறம், வட மாகாணத்தில் 34 உள்ளாட்சி சபைகளில் தலைமைப் பதவியைத் தட்டி எடுத்துள்ளதாக தமிழ் அரசு கட்சி மார் தட்டிக் கொண்டாலும், அவர்களின் தேர்ந்தெடுத்தப்பட்ட உறுப்பினர்கள், கூட்டணி கட்சிகள் மற்றும் தங்களது கட்சி தலைமையையும், முதுகில் குத்திய அவலமும் அரங்கேறியது. ஒருபுறம், கட்சி தலைமை, அந்த உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவர்களது உள்ளாட்சி உறுப்பினர் பதவியை இழக்கச் செய்தாலும், அதனால் மட்டும், ஏமாற்றப்பட்ட கூட்டணிக் கட்சியினருக்கு, குறிப்பாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கூட்டணி உறுப்பினர்களுக்கு என்ன பயன்?

அது போன்றே, தவிசாளர் பதவியை, ரிஷாத் அல்லது முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கூட்டணி கட்சியினரின் ஆதரவோடு வெற்றிபெற்ற பிறகு, பிரதித் தவிசாளர் பதவிக்கு அவர்களை ஏமாற்றிய விடயத்தில், தமிழ் அரசு கட்சி என்ன செய்யப் போகிறது?

இதனைவிடக் கேவலமான விடயம், ஓர் உள்ளாட்சி அமைப்பில், தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த தமிழ் காங்கிரஸ் அல்லது ஜனநாயக கூட்டணியினர், வேறு சிலவற்றில், தமிழ் அரசிற்கு எதிராக, கை கோர்த்து களமிறங்கியது. கேட்டால், ஆளும் தேசிய மக்கள் சக்தி, தமிழர் பகுதிகளில் மேலும் காலூன்றி விடக்கூடாது என்பது மட்டுமே தங்களது இலட்சியம் என்று வசனம் உரைப்பார்கள். அந்த லிஸ்டிலேயே தமிழ் அரசு கட்சியையும் இரண்டாவதாகச் சேர்ப்பார்கள்.

### வாக்காளர் கணிப்பு

ஆனால், விடயம் அதுவல்ல. அடுத்து வரும் மாதங்களில் இந்தக் கட்சிகளால் தெரிவு செய்யப்பட்டு, தலைமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ள உறுப்பினர்களின் செயல்பாடு குறித்து வாக்காளர்கள் கணித்து வருவார்கள். அதுபோன்றே ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் இலட்சணத்தையும் தமிழர் பகுதிகளில் உள்ள பிற உள்ளாட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு எதிராக எடை போடுவார்கள்.

இதுவே, இரண்டு, மூன்று ஆண்டுகள் சென்ற பின் என்றால் பிரச்சினை இல்லை. அதுவரை, மக்களின் எதிர்பார்புகளும் மதிப்பீடுகளும் நீண்டு போகாது. முதல் ஆறு முதல் எட்டு-பத்து மாதங்களில் 'இது தேறும், இது தேறாது' என்று முடிவு எடுத்துவிடுவார்கள்.

இதில் ஆளும் கட்சி வாக்காளர்கள், எதிரணி வாக்காளர்கள் என்ற பாகுபாடு இருக்காது. அதைவிட முக்கியமாக, புதிய தலைமையும் தங்களைப் போன்ற தமிழர்களை உள்ளடக்கிய அமைப்பு என்ற கருதலும் இருக்காது.

இந்தப் பின்னணியில், தற்போதைய கூட்டணிகளில் விரிசல் ஏற்பட்டால், அது அந்தந்த கட்சி மற்றும் கூட்டணித் தலைமைகளையே பெரியளவில் பாதிக்கும். காரணம், அந்த தவிசாளர் மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்களின் எதிர்பார்ப்பும் எதிர்காலமும் அடுத்த உள்ளாட்சி தேர்தல் வரையே நீடிக்கும். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் அடுத்த உள்ளாட்சி தேர்தல்கள் வரை அதிகமாக, அதீதமாக கவலைபட வேண்டாம்.

### தலைமைகளின் நிலைமை

ஆனால், அவர்கள் சார்ந்திருக்கும் கட்சித் தலைமைகளின் நிலைமை அதுவல்ல. அரச தரப்பு, அடுத்த காலத்தில் நாடு தழுவிய மாகாண சபை தேர்தல்களை சந்திக்கத் தயாரில்லை என்ற தொனியிலேயே பேசி வருகிறது. உள்ளாட்சி தேர்தல்களைப் போலவே, உச்ச நீதிமன்றம் தலையிட்டு மாகாண சபை தேர்தல்களை நடத்தி முடிக்க, அரசைக் கட்டாயப்படுத்தாவிட்டால், இந்த ஆளும்தரப்பும் அதற்கான முடிவை காலம் தாழ்த்தும்.

இதற்கும் உள்ளாட்சி தவிசாளர் தேர்வுகளுக்கும் என்ன தொடர்பு? தொடர்பு, தவிசாளர் தேர்வுகளில் இல்லை. மாறாக அவர்களின் செயல்பாடுகளில் இருக்கிறது. அடுத்த ஆறு அல்லது எட்டு மாதங்களில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படுமேயானால், ஒவ்வொரு உள்ளாட்சி பகுதியிலும், வாக்காளர்கள், தற்போதைய தவிசாளர் மற்றும் மேயர்களின் செயல்பாட்டை அவர்கள் சார்ந்த கட்சியின் தலைமைகளோடு ஒப்பீடு செய்வது தவிர்க்க முடியாது.

இந்த ஒப்பீடு, வாக்காளர்களின் மனத்தளவில் இருக்கலாம். குடும்பத்தினரிடையே விவாதிக்கப்படாலம். அதனால், மாகாண சபை தேர்தல் காலத்தில், இந்த கட்சிகளின் உள்ளாட்சி சபைகளின் செயல்பாடும், மக்களின் விருப்பத்தை பாதிக்கலாம்.

இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் பொருந்தும். இன்னும்

தொடர்ச்சி 5ம் பக்கம் ...........

# இது தேறும்.....

4ம் பக்கத் தொடர்ச்சி..........

சொல்லப்போனால், இரு மாகாணங்களிலும் உள்ள, தமிழ் பேசும் முஸ்லீம் கட்சியினருக்கும் பொருந்தும். அதாவது, தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளும் அவற்றின் தவிசாளர்களும் சோடை போனால், அதன் பாதிப்பு அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளின் மாகாண சபை வாய்ப்புகளைப் பாதிக்கும்.



## குண்டு சட்டிக்குள்

இந்தச் சூழ்நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் என்ன செய்யலாம்? என்ன செய்யவேண்டும்? ஒன்று, உள்ளாட்சி சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களது உறுப்பினர்களின் செயல்பாடு மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்கவேண்டும். அவர்களை கண்காணிக்கவும், அவ்வப்போது அவர்களைச் சந்தித்து ஆலோசனைகள் வழங்கவும், கட்சிகளின் தலைமை அலுவலகங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்கள் கட்சி தலைமைகளுடன் பாலமாகச் செயல்படலாம்.

ஆனால், அதுவே, கட்சித் தலைமைகளின் அல்லது குறிப்பிட்ட தலைவர்களின் கைப் பாவைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர்கள் செயல்படுகிறார்கள் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கக்கூடாது. குறிப்பாக, தலைமைக்குப் போட்டி நடக்கும் தமிழ் அரசு போன்ற பெரிய கட்சிகளில், தனிநபர் விசுவாசத்தை மட்டுமே கணக்கில் வைத்து, கட்சி தலைவர்கள் செயல்படக்கூடாது. ஆனால், தற்போதைய கள நிலைமை நம்பிக்கை தருவதாக இல்லை.

இது மட்டும் போதாது. பெரும்பாலும், உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகட்டும், அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் ஆகட்டும், அவர்கள் தங்களது அதிகாரம் மற்றும் அதிகார வரம்பு குறித்தெல்லாம் சரியான புரிதல் இல்லாமல், தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற வகையிலேயே செயல்பட்டு வருகிறார்கள். அதற்கு அவர்களை மட்டும் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை.

தேசிய அளவில், ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சி உறுப்பினர், தனது இடத்திற்கு அடுத்தவர் யாரும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்கிறார். தனது காலத்திற்குப் பின், கட்சியின் பெயர் சொல்லத் தனது தொகுதி அளவில் ஒரு தலைவர்வேண்டும் என்று, இரண்டாவது கட்ட தலைவர்களையும் வளர்த்துவிடுவதில்லை. இதுவே மாகாண சபை உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

இதனால், உள்ளாட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கேயே குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிப் பழகி விடுகிறார்கள். அவர்களை அடுத்த கட்டத்திற்குத் தூக்கி விட்டாலும், அவர்களால் அங்கு சரியாகச் செயல்பட முடிவதில்லை. பின்னர் இதனையே காரணம் காட்டி, தேசிய அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட பெரிய மனிதர்கள் எல்லாம், பிறரைத் தரம் தாழ்த்தியே பேசி, நடத்துகின்றனர்.

## சித்தன் போக்கு...

இத்தகைய நிலைமை அனைத்து மாகாணங்களுக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் பொதுவென்றாலும், தமிழர்கள் பகுதியில் இதன் தாக்கமும் வீரியமும் அதிகம். காரணம், கடந்த பல தசாப்தங்களாக, தேசிய அரசியலில் எதிர் கட்சியாகவே தங்களைப் பாவித்து செயல்பட்டு வந்த தமிழ் தலைமைகளால், தங்களது புறவாசல்களில் என்ன நடக்கிறது, அங்குள்ள மக்களுக்கு என்ன தேவை, என்பதெல்லாம் புரியவில்லை. இன்னமும் தெரியவில்லை. அவ்வாறு, புரிந்து, தெரிந்து கொள்வதை கௌரவ குறைவாகவே இந்த தலைமைகள் நினைத்துச் செயல்படுகின்றன.

அதாவது, அண்டை நாடான இந்தியா, எங்கோ இருக்கின்ற அமெரிக்கா, கானடா, மற்றும் இலங்கையை காலனி ஆதிக்கத்தில் ஆண்ட பிரித்தானியா ஆகிய நாடுகளின் தேர்தல் முறைகளையும், அங்கே மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதையும் கேட்டு, தெரிந்து புரிந்து கொண்டுள்ள இங்குள்ள தமிழ் தலைவர்கள், தங்களது தொண்டர்கள், தங்களது மக்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புகளை அறிந்துகொள்ள முயல்வதில்லை. எனவேதான், முந்தைய வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான ஆட்சி தங்களது மக்களின் தேவைகளை சரியாகக் கணித்துச் செயல்படவில்லை. அவர் சார்ந்த தமிழ் அரசுக் கட்சி தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பும் சித்தன் போக்கு, சிவன் போக்கு என்ற விதத்திலேயே ஆட்சி செய்தது.

இன்னும் சொல்லப்போனால், முந்தைய வட மாகாண சபையின் ஐந்தாண்டு கால பதவி முடிந்தவுடன் அதனை கலைத்திருக்காமல், கடந்த 2018-இல் புதிய தேர்தல் நடத்தப்பட்டிருந்தால், கூட்டமைப்பின் சாயம் அப்போதே வெளுத்திருக்கலாம். இன்று ஜேவிபி அணியினர் போல், அன்று பிளவுபடாத ஐக்கிய தேசிய கட்சி இங்கே மீண்டும் கால் பதித்திருக்கலாம். ஒன்றும் இல்லை என்றாலும், கூட்டமைப்பு 2013ஆம் ஆண்டின் முதல் தேர்தல் போல் அல்லாது, முக்கி, முனகியே வட மாகாண சபையின் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கவேண்டிய நிலை வந்திருக்கலாம்.

## முக்கியமான வேலை

இந்த பின்னணியில் தமிழ் தலைமைகள் செய்ய வேண்டியது என்ன? அனைத்துக் தமிழ் கட்சிகளும் ஒன்றுகூடி மாகாணசபைத் தேர்தலை சந்திக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கவே இருக்கிறது. ஆனால், அதற்கு அப்பால் சென்று, உள்ளாட்சி தலைமைகளுக்கு அறிவுரை கூற குழுக்களை அமைக்கும் அதேநேரத்தில் தமிழ்க் கட்சித் தலைமைகள் அதைவிட முக்கியமாக ஒரு வேலையை முன்னெடுக்க வேண்டும்.

அதாவது, தங்களது கட்சி அல்லது கூட்டணி சார்ந்த உள்ளாட்சி உறுப்பினர்களுக்கு, குறைந்தபட்ச சபை நடவடிக்கைகள் குறித்த அறிவும் பண்பாடும் கிடைப்பதற்கு பயிற்சி வகுப்புகள் நடத்தவேண்டும். அதிலும் குறிப்பாக, உள்ளாட்சி சபைகளுக்கான அரசு சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் தொடர்பாக, அவை குறித்து ஆழ்ந்த அறிவு உள்ளவர்களை வைத்து வகுப்புகள் எடுக்கவேண்டும்.

இங்கு குறிப்பாக, உள்ளாட்சிகளின் நிதி நிலைமை, நிதி நிலை அறிக்கைகள் தயாரிப்பு குறித்தெல்லாம், அந்த உறுப்பினர்களுக்கு தெளிவான அறிவு கிடைக்கவேண்டும். அதற்கெல்லாம், கட்சித் தலைமைகளே முன்னுரிமை கொடுத்து, முன்னெடுப்புகளை முடுக்கிவிடவேண்டும்.

இவ்வாறெல்லாம் இல்லாமல், எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற விதத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் தொடர்ந்து செயல்படுவார்களேயானால், அவர்களை மீண்டும் புறம்தள்ள தமிழ் வாக்காளர்கள் கிஞ்சித்தும் ஆலோசிக்க மாட்டார்கள். அதேசமயம், செம்மணி போன்ற உணர்ச்சி பிரச்சினைகளை முன்வைத்து மட்டுமே அவர்கள் தொடர்ந்து வாக்களித்து வரமாட்டார்கள். அதுவே, கடந்த நாடாளுமன்ற தேர்தல் அறிவித்த செய்தியும்கூட!



காலைக்கதிர் Kalaikkathir

# ராகமயில் ஒருவர் சுட்டுக்கொலை

ராகம, படுவத்தை பகுதியில் நேற்றிரவு இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியில் வந்த இருவர் பிஸ்டல் ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

படுவத்தை கிராம அபிவிருத்தி மாவத்தையில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இருந்த ஒருவரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட நபர் கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய கூட்டாளியான 'அமி உப்புல்' என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## பகிடிவதைக் குற்றச்சாட்டில் கைதான

# சப்ரகமுவ பல்கலை மாணவர் 10 பேரும் பிணையில் விடுவிப்பு

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பகிடிவதையினால் மன உளைச்சலுக்குள்ளாகி கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 மாணவர்களையும் பிணை வழங்க இரத்தினபுரி மேலதிக நீதிவான் செனவிரத்ன நேற்று பு உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 மாணவர்களும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சந்தேகநபர்களான 10 மாணவர்களும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்க பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 10 மாணவர்களுக்கும் எதிராக நீதிமன்றினால் வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த 10 மாணவர்களும் ஒவ்வொரு வார இறுதியும் காலை 09 மணி முதல் 12 மணிக்கிடையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# உணவுப் பாதுகாப்பு குறித்து யாழில் ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்து யாழ் மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தச்செயலமர்வில் சுகாதார அமைச்சின் பிரதம உணவு மற்றும் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி சுதர்சன், வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கருத்துரை வழங்கியிருந்தனர்.

யாழ் வலம்புரி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற செயலமர்வு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு , ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

# உயர் மின் அழுத்த வடத்தால் கொக்குவிலில் ஆபத்து அச்சம்

வீதி மின் விளக்கு கம்பத்திற்கு மிக அருகாக உயர் மின் அழுத்த மின் வடம் செல்வதனால் , உயிராபத்துக்கள் ஏற்படும் நிலைமை காணப்படுவதானல் அது தொடர்பில் மின்சார சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மஞ்சவனபதி முருகன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீதி மின் விளக்கு கம்பத்தின் மிக அருகாக உயர் மின் அழுத்த மின் வடம் செல்கின்றது. குறித்த மின் வடம் காற்று காரணமாக தொய்வு நிலையில் காணப்படுவதால் அது மின் விளக்கு கம்பத்திற்கு அருகாக செல்கிறது. அதனால் மின் விளக்கு கம்பத்தில் மின் வடம் தொடுகையிடுமாயின் ஆபத்துக்கள் ஏற்படலாம் என அப்பகுதியில் கடை வைத்திருக்கும் உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்விளக்கு கம்பத்தில் பழுதடைந்த மின் விளக்கினை திருத்த முற்பட்ட நல்லூர் பிரதேச சபை ஊழியர் ஒருவரே உயர் மின் அழுத்த மின் வடத்தில் இருந்து பாய்ந்த மின்சாரத்தால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார். இடுப்புப் பட்டி அணிந்து , பாதுகாப்பாக பணியில் ஈடுபட்டு இருந்தமையால், தீக்காயங்களுடன் உயிராபத்து இன்றி தப்பி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் வீதி மின் விளக்கு கம்பத்தில் படர்ந்திருந்த தாவர கொடியினை உணவாக உட்கொள்ள முயன்ற மாடு ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்திருந்தது.

எனவே குறித்த மின் விளக்கு கம்பம் தொடர்பில் மின்சார சபையினர் கவனம் செலுத்தி , அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.




# இலங்கைக்குள் இந்திய மீனவர் வராமல் பார்ப்பது அந்நாட்டு அமைச்சரின் கடமை

## மீனவர் சங்கங்கள் கருத்து

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்கவேண்டியது அந்த நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சரின் கடமை என நாங்கள் கருதுகிறோம். எனவே, இவற்றை கருத்தில்கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் எமது கடல் வளத்தை பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்டத் தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுப் பகல் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட பிராந்திய மீனவர்களின் பாரிய பிரச்சினையாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை காணப்படுகின்றன.

ராமேஸ்வரத்தில் இடம்பெற்ற கச்சத்தீவு மீட்பு போராட்டம் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் கூறப்பட்ட விடயம் குறித்தும் அதற்கான தக்க பதிலடியை கடற்றொழில் அமைச்சர் வழங்கியுள்ளார். எமது கடற்றொழில் அமைச்சர் வழங்கிய பதிலை நாங்களும் கூற விரும்புகிறோம்.

இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளத்தை நாசப்படுத்துவதும், இராமேஸ்வரம் மீனவ சங்கங்கள் இலங்கைக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தச் சொல்வதும் கால அவகாசத்தை கோருவதாகவும் காணப்படுகிறது.

இந்திய மீனவர்கள் சட்ட விரோதமான கடற்றொழிலையே செய்கின்றனர். இதனை முற்றுமுழுதாக நிறுத்த வேண்டும். கச்சத்தீவை இலங்கைக்கு ஒப்பந்தம் மூலம் வழங்கும்போது அதற்கான பல்வேறு விடயங்களை இலங்கை விட்டுக் கொடுத்துள்ளது.

எமது மீனவர்களின் பிரச்சினை வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்டதாக காணப்படுகிறது. இலங்கை வட பகுதி மீனவர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும். எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கிற செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்கவேண்டியது ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சரின் கடமை என்றே நாங்கள் கருதுகிறோம். எனவே, இவற்றை கருத்தில்கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல், எமது கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# 'துர்வாயுக்ம' சமர்ப்பணம் எனும் அருகம்புல் அர்ச்சனை.





விநாயகருக்குக் கொழுக்கட்டை,மோதகம் படைகின்றோம் – அவருக்கு மிகப் பிடித்தமானவை அவை.

அதேபோன்றுஅவரைவழிபடும்போதும்அர்ச்சிக்கும் போதும் அருகம்புல் கொண்டுபிரார்த்தித்தால் மகிழ்ந்து அருள் மழை பொழிவார்.அவர் அருட் கடாட்சத்தில் நாம் மகிழலாம்.அந்தளவு வலிமை கொண்டது அருகம் புல் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகின்றது.

மேலும் அது புல்வகைத் தாவரங்களின் அதிபதி கேதுபகவான் என்றும், ஒருவர்க்கு கேது தோஷம் தோன்றின் தோஷ விமோசனம் பெற விநாயகருக்கு அருகம்புல் சார்த்தி அர்ச்சனை செய்து வழிபட்டால் பலனுண்டு என்றும் கூறுகின்றது.

இன்னும்ஒருவருக்குகேதுதோஷம்இருந்தால்ஞாபக மறதி,மனக்குழப்பம்மற்றும்மனஉளைச்சல்,பயஉணர்வு போன்றனதோற்றம்பெற்று அல்லலுறுத்தும்.அவற்றில் இருந்து அவர் தன்னை விடுவித்துக் கொள்ள விநாயகருக்கு அருகம்புல் கொண்டு மனம் மொழி மெய்யினால் அர்ச்சித்து வழிபட்டால் விமோசனம் பெறமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. விநாயகருக்கு அருகம்புல் அர்ச்சனை செய்வதன் மூலம் மேலும் பல பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவையாவன,

மன உளைச்சல் காரணமாகத் தோன்றக்கூடிய இறுக்கமானமனநிலைஅருகம்புல்சாத்திவழிபடுவதன் மூலம் அகன்று இயல்புநிலை தோன்றும்.

அத்துடன் இறுக்கமான மனநிலையால் இனந்தெரியாத பயஉணர்வு தோன்றியிருப்பின், அது நீங்கி நல் மனநிலையைத் தந்து நிற்கும். குடும்ப பிரச்சனை, கடன் தொல்லை,வறுமை ஆகியன அருகம்புல் அர்ச்சனை நீக்கி உதவக் கூடியது.

விநாயகர்க்குரிய சதுர்த்தி தினத்தன்று அருகம் புல் சாத்தி வழிபட்டால் அற்புதமான பலன்கள் கூடிவரும் என்பர்.

செல்வங்களுக்கெல்லாம் அதிபதியான குபேரன் தனது செல்வங்களுலெல்லாம் மேலானது அருகம்புல் என்று கூறியுள்ளதையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.



## அழிவில்லாத அருகம்புல்

அருகம்புல்லின் சிறப்பில் மேலுமொன்றை இங்கு பதிவு செய்யலாம்.அது என்னவெனில் ,அருகம்புல் நித்தியமானது.அது கடும் வரட்சியினாலோ அல்லது கடும் வெள்ளத்தினாலோ அல்லது வேறு காரணிகளாலோ அழிவுட்குட்படாத இயல்பினைக் கொண்டுள்ளது.அந்த நித்திய இயல்பை அருகம்புல் தன்னகத்தேகொண்டுள்ளமைக்கான காரணத்தினைப் புராணம் தெளிவாக்கியுள்ளது.

அதன்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைப் பெற்று சாகாவரம் பெற்றுக் கொண்டனர்என்பதை நாமறிவோம்..அவர்கள் அமிர்தத்தினைப் பெற்ற செயற்பாட்டின்வேளை, தற்செயலாக அங்கெ ஒரு சிறு துளி சிதறி விட்டது. அந்தச் சிதறிய துளி நிலத்தில் இருந்த அருகம்புல்லின் மேல் விழுந்தது. அருகம் புல்லுக்குச் சிறப்பான ஆகர்ஷன சக்தியிருப்பதால் சிதறி விழுந்த அமிர்தத்தைக் உடனடியாக தன்னுள் ஈர்த்துக் கொண்டது.அதனால் அருகம்புல்லும் தேவர்கள் போன்று அழிவில்லாத இயல்பினைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே அந்த நித்திய இயல்பு கொண்ட அருகம்புல் கொண்டு வழிபடுவதால் பேரருள் நிறையப்பெறும் என்பதில் பேருண்மை உண்டல்லவா?

அருகம்புல் அர்ச்சனைப் பொருளான வரலாறு

அருகம்புல் விநாயகரின் விருப்புப் பொருளான மைக்குப் பின்னணியில் ஒரு கருணைமிகு சம்பவம் உண்டு என்றும் புராணம் இயம்புகின்றது.அதன்படி..

யாஷினிதேவி என்ற தேவ மங்கை விநாயகப் பெருமானின் பராக்கிரமத்திலும் கருணைமிகு செயற்பாடுகளிலும் பெருவிருப்புற்று அவரைத் திருமணம் முடிக்க வேண்டி பெரும் யாகம் செய்து தவம் புரிந்தாள்.

திருமணப் பற்றற்ற விநாயகப் பெருமான், யாஷினிதேவியினைச் சமாதானம் செய்து. தன்னிலை விளக்கம் பகிர்ந்து, அவளின் தவவலிமைக்கு மதிப்பளித்து, அவளை அருகம்புல்லாக மாற்றி,'நீ என்றும் எனது விருப்புப் பொருளாக இருப்பாய்' என்று கருணையுடன் வரம் அளித்தருளினார்.

அன்றிலிருந்து அருகம்புல் விநாயகப்பெருமானின் புனிதமான அருச்சனைப் பொருளாகத் திகழ்ந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

அருகம் புல்லின் சிறப்புணர்ந்த பக்தர்கள் அருகம்புல் கொண்டு விநாயகரை வழிபட்டு நல்ல பயன்களைப் பெற்று மகிழ்கின்றார்கள்.

அருகம்புல் அர்ச்சனை வழிபாட்டின் சிறப்பை உணர்ந்து கொள்வதற்கு இங்கே இன்னுமோர் சந்தர்ப்பத்தையும் கூற முடியும்,

## சாபவிமோசனமளித்த அருகம்புல்

எம்பெருமான் சிவபெருமானும், சக்தி தேவி பார்வதி அம்மையும் ஓய்வாக இருந்த ஒரு நாள், கைலாசத்திலே தாயம் விளையாடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த விளையாட்டுக்கு 'நந்திதேவர்' நடுவராக இருந்தார்.

நந்திதேவர் சிவன்பால் கொண்ட ஈர்ப்பு காரணமாக, அவருக்குசார்பாகவரன்முறைநழுவிசெயற்பட்டார்.தான் நடுவர் என்பதைப் புறந்தள்ளி சிவனுக்கு ஆதரவு தந்தார்.இது பார்வதி அம்மைக்கு கடும் சினத்தைக் கொடுத்தது நின்றது.

நடுவுநிலை தவறிய நந்திதேவருக்கு கடும் சாபத்தினைப் பகர்ந்தார்.

நந்திதேவர் தன தவறை உணர்ந்து, பார்வதி அம்மையைவணங்கி,தன்தவறைமன்னித்தருளும்படி பணிந்து. சாப விமோசனம் வேண்டிநின்றார்.

கருணை உள்ளங்கொண்ட பார்வதி அம்மையார்,கோபம் தணிந்து 'சதுர்த்தி தினத்தில் தனது மூத்த பிள்ளையான விநாயகருக்கு, அவரது விருப்பத்துக்குரியபொருளைச்சமர்ப்பித்துபிரார்த்தனை செய்தால் விமோசனம் கிடைக்கும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நந்திதேவர் சற்றும் தாமதியாது அருகம் புல்லை விநாயகருக்குப் படைத்து அர்ச்சனை செய்து உள்ளன்புடன் மனதை ஒருநிலைப்படுத்தி பிரார்த்தித்து சாபவிமோசனம் பெற்றுய்ந்தார் என்று புராணத்தில் செய்தியுண்டு

எனவே நாமும் அருகம்புல்லின் சிறப்புணர்ந்து, அருகம்புல் கொண்டு விநாயகப் பெருமானை அர்ச்சித்துப் பலன் பெறுவோமாக.

ஆதித்தன்
அவுஸ்திரேலியா.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2025இல் வெளியிடப்பெற்றது